# 3 நான்கு நற்செய்தி நூல்கள்

திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 27 நூல்களில் முதல் நான்கு நூல்களும் "நற்செய்தி" என அழைக்கப்படுகின்றன. அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயராலேயே அவை அழைக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பணி, போதனை,மரணம், உயிர்ப்பு என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவை இயேசுவைப் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்ட நான்கு மூலங்கள் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவையாவன :-

1. புனித மத்தேயுவினால் எழுதப்பட்ட மத்தேயு நற்செய்தி
2. புனித மாற்குவினால் எழுதப்பட்ட மாற்கு நற்செய்தி
3. புனித லூக்காவினால் எழுதப்பட்ட லூக்கா நற்செய்தி
4. புனித யோவானால் எழுதப்பட்ட யோவான் நற்செய்தி

நான்கு நற்செய்திகளும் நான்கு அடையாளங்களால் அறியப்படுகின்றன.

## 1. மத்தேயு நற்செய்தி



படம் 3.1 - புனித மத்தேயு



படம் 3.2 - அடையாளம் மனிதன்

இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்களில் புனித மத்தேயுவும் ஒருவர் ஆவார். அழைப்புப்பெற முன் அவர் வரி தண்டுபவராக இருந்தார். தனது அழைப்பின் பின்பு இயேசுவின் பகிரங்க வாழ்க்கையின் பங்குதாரராகி

அவரைக் கண்டுணர்ந்தார். இறைவாக்கினரின் இறைவார்த்தைகளை அதிகமாக மேற்கோள்காட்டி எதிர்பார்க்கப்பட்ட "மெசியா" இயேசுவே ஆவார் என உறுதிப்படுத்துகின்றார். இயேசுவின் மூதாதையர் பட்டியலோடு நற்செய்தியை ஆரம்பித்துள்ளார். இந்த நற்செய்தியின் அடையாளம் "மனிதன்" ஆகும்.

### 2. மாற்கு நற்செய்தி




படம் 3.3 - புனித மாற்கு




படம் 3.4 - அடையாளம் சிங்கம்

புனித மாற்கு இயேசுவின் திருத்தூதர் அல்ல. இவர் புனித பேதுருவின் சீடராவார். யோவான் மாற்கு என அழைக்கப்படும் இவர் பேதுருவின் மொழிபெயர்ப்பாளராகவும் பணி புரிந்துள்ளார். எனவே இயேசு வைப் பற்றிய அனேகமான தகவல்களை பேதுருவிடமிருந்து கேட்டறிந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. திருமுழுக்கு யோவானின் போதனையின் விபரங்களோடு ஆரம்பித்துள்ளார். இந்நற்செய்தியின் அடையாளம் "சிங்கம்" ஆகும்.

### 3. லூக்கா நற்செய்தி




படம் 3.5 - புனித லூக்கா




படம் 3.6 - அடையாளம் எருது

புனித லூக்கா இயேசுவின் திருத்தூதர் அல்ல. அவர் ஒரு வைத்தியர் ஆவார். வரலாற்று அறிஞரான அவர் ஒரு சித்திரக் கலைஞனுமாவார். நற்செய்தி எழுதிய ஒரேயொரு "புற இனத்தவர்" லூக்கா ஆவார். இவர் புனித பவுலோடு மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டிருந்தார். பல்வேறு மூலங்களிலிருந்து தகவல்களைத் தேடி இந்நற்செய்தியைத் தயாரித்துள்ளார். பாடல்கள், செபங்கள், பெண்கள் பற்றிய தகவல்கள் இதில் அதிகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

இயேசு கிறிஸ்து யூத இனத்துக்கு மட்டுமல்ல எல்லா இனங்களினதும் மீட்பர் என்பதை எடுத்துக் காட்டுகிறார். செக்கரியாவின் குருத்துவப் பணியோடு இந்நற்செய்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நற்செய்தியின் அடையாளம் "எருது" ஆகும்.

### 4. யோவான் நற்செய்தி




படம் 3.7 - புனித யோவான்




படம் 3.8 - அடையாளம் கழுகு

புனித யோவான் இயேசுவின் திருத்தூதர் ஆவார். இவரது சகோதரனாகிய பெரிய யாக்கோபுவும் இயேசுவின் திருத்தூதர் ஆவார். இயேசு இவர்களை அழைப்பதற்கு முன்னர் இவர்கள் இருவரும் மீனவர்களாக இருந்தனர். செபதேயு, சாலமி இவர்களது பெற்றோராவர். சாலமி மரியாவின் உறவினராவாள். ஆகவே இவர்கள் இருவரும் இயேசு வின் உறவு முறை சகோதரர்கள் ஆவர். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஆழமான இறையியல் எண்ணக்கருக்களை முன்வைத்துள்ளார். ஆழமான இறையியல் எண்ணக்கருவோடு இந்நற்செய்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்நற்செய்தியின் அடையாளம் "கழுகு"ஆகும்.

இயேசு இவ்வுலகிற்கு வருகை தந்தமை ஒரு நற்செய்தியாகும். ஏனெனில் அவர் இவ்வுலகிற்கு முழு மனித சந்ததிக்கும் மீட்பைப் பெற்றுத்தரவே வந்தார்.

## செயற்பாடு

① இடைவெளிகளை நிரப்புக.

(மாற்கு, லூக்கா, மத்தேயு, எருது, சிங்கம், யோவான், யாக்கோபு)

1. புனித .................. ஒரு வைத்தியராவார்.
2. இயேசுவின் திருத்தூதரான .................. நற்செய்தியே புதிய ஏற்பாட்டில் முதலாவது நற்செய்தியாக உள்ளது.
3. மாற்கு நற்செய்தியின் அடையாளம் .................. ஆகும்.
4. ............. நற்செய்தி கழுகை அடையாளமாகக் கொண்டது.
5. நற்செய்தியாளர் யோவானின் சகோதரன் .................. ஆவார்.

② பின்வரும் சந்தர்ப்பங்களில் பிறர்க்கு நீங்கள் எவ்வாறு நற்செய்தியாக செயற்படலாம் என்பதை எழுதவும்.

1. வகுப்பிலே துன்பத்துக்குள்ளாகி கைவிடப்பட்ட ஒரு நண்பனுக்கு / நண்பிக்கு
2. விஞ்ஞான பாடம் கஷ்டமானது என்று கூறும் ஒரு நண்பனுக்கு / நண்பிக்கு
3. உங்களது தந்தை வெளிநாட்டில் இருக்கும்போது தாய்க்கும் சகோதர சகோதரிகளுக்கும்.

## ஒப்படை

- திருவிவிலியத்தை எடுத்து நற்செய்தி நான்கினையும் புரட்டி, அவற்றிலுள்ள அறிமுகத்தை வாசித்து, அதிலுள்ள விடயங்களை உள்ளடக்கி சிறு கைந்நூல் ஒன்று தயாரிக்கவும்.



*வாழ்க்கைக்கு........*

*பிறர்க்கு எப்போதும் ஒரு நற்செய்தியாக இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.*